ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | இஸ்லாம் – I | நேரம் : 1 மணி. |
|---|---|---|

- **பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. 'தேவையற்றவன்' என்ற கருத்தைத் தரும் அல்லாஹ்வின் திருநாமம்,
   01. இலாஹ் 02. அஹத் 03. ஹாலிக் 04. ஸமத்

2. அல்லாஹ் பற்றிய நம்பிக்கையும், கழா கத்ர் பற்றிய நம்பிக்கையும் தொடர்புபடும் அகீதா பிரிவு,
   01. அர்ருஹானிய்யாத் 02. அல் இலாஹிய்யாத்
   03. அஸ்ஸம் இய்யாத் 04. அந் நுபுவ்வாத்

3. ஸுஹுபுகளும், வேதங்களும் வழங்கப்பட்ட நபி,
   01. இத்ரீஸ்(அலை) 02. இப்ராஹீம்(அலை) 03. மூஸா(அலை) 04. ஈஸா(அலை)

4. நீரின் வகைகளுள் 'மாஉத் தஹூர்' என்பது,
   01. மிகச் சுத்தமான நீர் 02. சுத்தமான நீர்
   03. சுத்தம் செய்ய பயன்படுத்தப்பட்ட நீர் 04. குல்லதைன் அளவை விடக் குறைந்த நீர்

5. பின்வருவனவற்றுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
   01. இஸ்லாத்தில் உறுப்புகள் செய்யும் அமல்களை விட உள்ளம் சார்ந்த அமல்களுக்குக் கூடுதலான நன்மைகள் வழங்கப்படுகின்றன.
   02. உள்ளம் தூய்மையாக இருக்கும்போது உடலால் தீமைகள் விளைந்தாலும் பரவாயில்லை.
   03. உடலுறுப்புகள் செய்யும் பாவங்களை விட உள்ளத்தால் விளையும் பாவங்கள் கடுமையானவை.
   04. அல்லாஹ் உடலின் செயற்பாடுகளையன்றி உள்ளத்தின் செயற்பாடுகளை மாத்திரமே நோக்குகின்றான்.

6. ருகூவில் இருந்து எழுவதைக் குறிக்கும் அறபுப் பதம்,
   01. இஸ்திப்தாஹ் 02. இஃதிதால் 03. இப்திராஷ் 04. தஹ்ரீம்

7. ஆசிரியராகக் கடமையாற்றும் ஹாசீம் அண்மைக் காலத்தில் நீண்டகால விடுமுறையில் வீட்டில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டபோது தனது வெற்றுக்காணியை வளப்படுத்தி, அதில் பயிரிட்டு போதுமான வருமானத்தையும் பெற்றார். இச்செயற்பாடு அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
   01. இஜாரா 02. இமாரத் 03. இபாதத் 04. இஸ்திஸ்ஹான்

8. பின்வருவனவற்றுள் மறுமை நாளுடைய பெயர் அல்லாதது,
   01. யவ்முத் தஆபுன் 02. யவ்முத் தீன் 03. யவ்முன் நஹ்ர் 04. யவ்முல் ஃபஸ்ல்

9. உம்மஹாத்துல் மு..மின்களுள் ‘நீண்ட கையுடையவர்’ என நபியவர்களால் வர்ணிக்கப்பட்டவர்,
   01. ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)   02. ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி)
   03. ஹப்ஸா (ரழி)   04. ஆயிஷா (ரழி)

10. பின்வருவனவற்றுள் ஈமானைப் பாதிக்கும் அம்சம் அல்லாதது,
   01. ஷிர்க்   02. இஹ்தாத்   03. ரித்தத்   04. குப்ர்

11. கரீம் 40 மாடுகளை வாங்கி வளர்த்து வந்தார். 15 மாதங்களின் பின்னர் அவரிடம் 70 மாடுகள் இருந்தன. அவற்றுக்கு அவர் ஸக்காத் கொடுக்கவேண்டிய அளவு,
   01. ஒரு வயதுள்ள இரண்டு காளை மாடுகள்.
   02. இரண்டு வயதுள்ள இரண்டு பசு மாடுகள்.
   03. இரண்டு வயதுள்ள ஒரு காளை மாடும், ஒரு வயதுள்ள ஒரு பசு மாடும்.
   04. ஒரு வயதுள்ள ஒரு காளை மாடும், இரண்டு வயதுள்ள ஒரு பசு மாடும்.

12. நபியவர்கள் அல்குர்ஆனை ஓதுவதற்குக் காட்டிய ஒழுங்கு,
   01. தர்தீபுந் நுஸுல்   02. தர்தீபுத் திலாவத்   03. இக்ர..   04. ஸூரா

13. கீழே ‘அ’ பிரிவில் முஸ்லிம் படைகளின் வெற்றிகளும், ‘ஆ’ பிரிவில் அவற்றை வழிநடத்திய தளபதிகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது,

| அ | ஆ |
|---|---|
| i. ஸ்பெயின் | A. தாரிக் இப்னு ஸியாத் |
| ii. சிந்து | B. முஹம்மத் அல் பாதிஹ் |
| iii. கொன்ஸ்தாந்துநோபிள் | C. முஹம்மத் பின் காசிம் |
| iv. பலஸ்தீன் | D. ஸலாஹுத்தீன் |

   01. ACBD   02. BADC   03. DBCA   04. CABD

14. அய்யாமுத் தஷ்ரீக் உடைய நாட்கள்,
   01. துல்ஹஜ் 12, 13, 14   02. துல்ஹஜ் 10, 11, 12
   03. துல்ஹஜ் 11, 12, 13   04. துல்ஹஜ் 13, 14, 15

15. அர்கானுல் கியாஸில் உள்ளடங்காதது,
   01. ஸூஊதி   02. இல்லத்   03. ஹுகும்   04. அல்பரஉ

16. ‘சந்தேகம் ஊட்டக்கூடியதை விட்டுவிடு. சந்தேகம் உண்டாக்காததை பின்பற்று’ என்பது,
   01. ஸஹாபியின் கூற்று   02. ஹதீஸ் வசனம்   03. அல்குர்ஆன் வசனம்   04. தாபிஈன் கூற்று

17. ஸூறா லுஹாவின் வசனங்களின் எண்ணிக்கை,
   01. 10   02. 12   03. 11   04. 9

18. ஸஹீஹுல் புகாரி கிரந்தத்தில் உள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை,

01. 7275　　02. 7825　　03. 7910　　04. 7950

19. அஸபிய்யா எனப்படுவது

01. கோத்திரம்　　02. கோத்திர உணர்வு　　03. குடும்பங்கள்　　04. கோத்திரத் தலைவர்

20. அன்வர் பிற்பகல் நான்கு மணிக்குப் புறப்பட்ட பஸ்ஸில் ஏறி 100km பயணம் செய்து தான் செல்லவேண்டிய இடத்தை அடைய இருந்தால், தொழுகை விடயத்தில் அவர் செய்யவேண்டியது,

01. அஸர் தொழுகையை, ம.்.ரிப் தொழுகையுடன் சேர்த்து தொழுதுவிட்டு பயணத்தை ஆரம்பித்து இருப்பார்.

02. தான் செல்லவேண்டிய இடத்தை அடைந்ததும், ம.்.ரிப் தொழுகையையும், இஷா தொழுகையையும் சுருக்கித் தொழுவார்.

03. அஸர் தொழுகையை, லுஹர் தொழுகையுடன் சேர்த்து தொழுதுவிட்டு பயணத்தை ஆரம்பித்து இருப்பார்.

04. தான் செல்லவேண்டிய இடத்தை அடைந்ததும் ம.்.ரிப் தொழுகையை இஷா தொழுகையுடன் சேர்த்து தொழுவார்.

21. 'தூபான்' எனும் வெள்ளத்தினால பாதிப்புற்ற பள்ளிவாயலும், அக்காலத்தில் வாழ்ந்த நபியும் முறையே,

01. மஸ்ஜிதுல் அக்ஸா - ஈஸா (அலை)　　02. க.்.பதுல்லாஹ் - நூஹ் (அலை)

03. மஸ்ஜிதுன் நபவி - நூஹ் (அலை)　　04. மஸ்ஜிதுல் அப்ரார் - இப்ராஹீம் (அலை)

22. கீழே 'அ' பகுதியில் குலபாஉர் ராஷிதூன்களின் பெயர்களும், 'ஆ' பகுதியில் அவர்களோடு சம்பந்தப்பட்ட சில நிகழ்வுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால்,

| அ | ஆ |
|---|---|
| i. கலீபா அபூபக்ர் (ரழி) | A. தீவானுல் பரீத் |
| ii. கலீபா உமர் (ரழி) | B. சிப்பீன் யுத்தம் |
| iii. கலீபா உஸ்மான் (ரழி) | C. யமாமா யுத்தம் |
| iv. கலீபா அலி (ரழி) | D. கடற்படை உருவாக்கம் |

01. BDCA　　02. CADB　　03. CABD　　04. DABC

23. 'குல்' ஸூறா தொகுதியில் அடங்காத ஸூறா,

01. ஸூறதுல் காபிரூன்　　02. ஸூறத்துல் இ.்.லாஸ்

03. ஸூறதுன் நாஸ்　　04. ஸூறத்துல் பலக்

24. இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் உழைப்பு தொடர்பில் பிழையான கூற்று,

01. அல்லாஹ் அவனது அருளை தேடச்சொல்லி ஏவுகிறான். எனவே அதைத் தேடுவது கடமையாகும்.

02. உழைப்பும் இஸ்லாமிய வரையறைகளுக்குள் அமையும்போது வணக்கமாக மாறும்.

03. உலக செல்வங்கள் மீது அளவுக்கதிமான ஆசை வராமலிருக்க உழைக்காமல் இருக்கமுடியும்.

04. உழைப்பில் ஈடுபடுவோர் தொழுகையில் சிறிய ஸூறாக்களை ஓதுவதற்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

25. பின்வருவனவற்றுள் பர்ளு கிபாயாவுக்கான உதாரணம் அல்லாதது,

01. மார்க்க அறிஞர்களை உருவாக்கல் 02. ஜனாசாவுக்கான கடமைகள்

03. துறைசார் நிபுணர்களை உருவாக்கல் 04. குடும்பப் பராமரிப்பு

26. 'ஸீறத்து ரஸுலுல்லாஹ்' என்ற நூலை எழுதியவர்,

01. முஹம்மத் பின் இஷ்ஹாக் 02. முஹம்மத் அப்துல் மலிக் பின் ஹிஷாம்

03. இப்னு பதூதா 04. இப்னு மாலிக்

27. 'வஸதிய்யா' எனப்படுவது,

01. நடுநிலை போக்கு 02. முதன்மைப் படுத்தல்

03. முற்போக்குத் தன்மை 04. அமைதியாக இருத்தல்

28. குறித்த நிறுவனம் ஒன்று ஒரு தொகைப் பணத்தை தர்மமாக வழங்க முடிவெடுத்துள்ளது. அந்நிறுவனம் பின்வரும் கூற்றுக்களுள் முன்னிலைப்படுத்தவேண்டிய விடயம்,

01. மைதானங்களை அமைத்தல்.

02. கொவிட் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல்.

03. கலாசார மண்டபங்களை அமைத்தல்.

04. ஊரிலுள்ள இளைஞர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை அன்பளிப்புச் செய்தல்.

29. கீழே 'அ' நிரலில் தலாக் பற்றிய விளக்கங்களும், 'ஆ' நிரலில் அவற்றின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக ஒழுங்குபடுத்தினால்,

| அ | ஆ |
|---|---|
| i. மீளத்தக்கது | A. லிஹார் |
| ii. முறையற்ற தலாக் | B. தலாக் ரஜஈ |
| iii. மனைவி மீது விபச்சார குற்றச்சாட்டை சுமத்துதல் | C. தலாக் பிதஈ |
| iv. மனைவியை உடல்ரீதியாக தாய்க்கு ஒப்பிடல் | D. லிஆன் |

01. BCDA 02. ADBC 03. CDAB 04. ACDB

30. உஸ்மான் என்பவர் தனது மனைவி இறந்த பின்னர் அவளது தந்தையின் சகோதரியைத் திருமணம் முடிக்க விரும்பினார். அது பற்றி நீர் யாது கூறுவீர்?

01. அவளது தந்தையின் சகோதரி உஸ்மானுக்கு மஹ்ரமி ஆவாள். எனவே அவளை திருமணம் முடிக்க முடியாது.

02. அவளது தந்தையின் சகோதரி உஸ்மானுக்கு அஜ்னபி ஆவாள். எனவே அவளை திருமணம் முடிக்க முடியும்.

03. அவளது தந்தையின் சகோதரி உஸ்மானுக்கு தற்காலிக மஹ்ரமி ஆவாள். எனவே அவளை திருமணம் செய்யமுடியாது.

04. இது பற்றித் தீர்க்கமாகக் கூறமுடியாது.

31. பின்வருவனவற்றுள் முஜ்தஹிதுகளிடம் இருக்கவேண்டிய பண்புகளில் உள்ளடங்காதது,
    01. முஸ்லிமாக இருத்தல்.
    02. கலைகளில் நிபுணத்துவம் பெற்றிருத்தல்.
    03. அனைத்து மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றிருத்தல்.
    04. குறித்த பிரச்சினை பற்றிய தெளிவு இருத்தல்.

32. ‘பிக்ஹுல் அக்பர்’ என்ற நூலின் ஆசிரியர்,
    01. இமாம் அபூ ஹனீபா (ரஹ்)
    02. இமாம் மாலிக் (ரஹ்)
    03. இமாம் ஷாபிஈ (ரஹ்)
    04. இமாம் ஹன்பல் (ரஹ்)

33. ‘முஸ்லிம் நேசன்’ பத்திரிகையை வெளியிட்டவர்,
    01. டி.பி. ஜாயா
    02. எம்.சி. சித்திலெப்பை
    03. ஒராபி பாஷா
    04. வாப்பிச்சி மரிக்கார்

34. கீழே ‘அ’ பிரிவில் உமர் (ரழி) இன் நிர்வாகத்தில் இருந்த பதவிகளும், ‘ஆ’ பிரிவில் அவற்றின் கருத்துக்களும் தரப்பட்டுள்ளன. அவற்றின் சரியான ஒழுங்குமுறையாக அமைவது,

| அ | ஆ |
|---|---|
| i. ஸாஹிபுல் கறாஜ் | A. ஆளுனர் |
| ii. வாலி | B. பொலிஸ் அதிகாரி |
| iii. காதிபுத்திவான் | C. இறைவரி வசூலுக்கான அதிகாரி |
| iv. ஸாஹிபுல் அஹ்தாத் | D. இராணுவ காரியதரிசி |

    01. CADB   02. BDAC   03. ACBD   04. CDAB

35. சிசு உருவாக்கம் பற்றிய அல்குர்ஆன் கருத்துக்களை ஆய்வு மூலம் உறுதிப்படுத்திய நவீன கால அறிஞர்,
    01. வில்லியம் கைப்
    02. பேராசிரியர் வில்சன்
    03. பேராசிரியர் அல்பட்
    04. பேராசிரியர் கீர்த்மோர்

36. அல்குர்ஆன் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஆண்களுக்கு வழங்கியுள்ளது. ஏனெனில் அவர்கள்,
    01. மஹர் கொடுத்து மணம் முடிக்கிறார்கள்.
    02. வலீமா விருந்தளித்து மகிழ்வடைகிறார்கள்.
    03. மனைவி, மக்களுக்கு செலவிடுகிறார்கள்.
    04. தலைமைப் பொறுப்புக்கேற்ற மனவலுவையும், உடல் வலுவையும் கொண்டுள்ளனர்.

37. பின்வரும் விடயங்களில் நிகாஹ் செல்லுபடியாவதற்கு அவசியம் அல்லாதது,
    01. மணமகனின் தந்தை   02. ஈஜாப்-கபூல்   03. வலி   04. சாட்சிகள்

38. இருபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்குக் கொரோனா தடுப்பூசி ஏற்றப்படுவதாக பொதுச் சுகாதார அதிகாரியினால் குருத்தலாவை மக்களுக்கு வழங்கப்பட்ட பள்ளிவாயல் ஒலிபெருக்கி அறிவித்தலைக் கேட்ட சிலர் பின்வருமாறு தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

A. நாம் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுவதோடு, அரச சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டும்.

B. நோய்த்தடுப்பு வழிமுறைகள் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

C. எமது முன்னோர்கள் தடுப்பூசி ஏற்றாததினால் நாமும் ஏற்றவேண்டிய அவசியமில்லை.

D. இளைஞர்கள் அதிகமாக வெளியிடங்களுக்குப் பயணிப்பதால் தன்னையும், பிறரையும் பாதுகாக்கத் தடுப்பூசி இன்றியமையாதது.

மேற்படி கூற்றுகளுள் சரியானவை,

01. A, B, C    02. A, C, D    03. A, B, D    04. B, C, D

39. இஸ்லாத்தை விட்டு மதம் மாறிய ஒருவர் தனது உறவுகள் மரணிக்கையில் அவர்களது சொத்திலிருந்து தனக்கும் பங்கைப் பெற முடியுமா? என உம்மிடம் வினவப்பட்டால் நீர் கூறுவது,

01. அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்கின் அரைவாசியைப் பெறமுடியும்.

02. அது அவர்களின் சகோதரர்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

03. அவர்களது சொத்திலிருந்து தனக்குரிய பங்கைப் பெறமுடியாது.

04. அவர்களது சொத்திலிருந்து தனக்குரிய பங்கைப் பெறமுடியும்.

40. நபி (ஸல்) அவர்கள் மறைமுக தொடர்பாடலுக்காக உருவாக்கியிருந்த பதிவுத் திணைக்களம்,

01. திவானுல் பரீத்    02. திவானுல் அஹ்தாத்

03. திவானுல் கராஜ்    04. திவானுல் இன்ஷா

(40x1=40 புள்ளிகள்)

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | இஸ்லாம் – II | நேரம் : 2 மணி. |
|---|---|---|

- முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

01. **சுருக்கமான விடை தருக.**
    - i. வஹியின் இரண்டு வகைகளையும் குறிப்பிடுக.
    - ii. தொழுகையின் பர்ழுகள் நான்கைக் குறிப்பிடுக.
    - iii. ‘குப்ர்’ஐ ஏற்படுத்தும் வழிமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக.
    - iv. ‘ஸக்காத்’ பெறுவோரில் பீ ஸபீலில்லாஹ், இப்னு ஸபீல் என்போரை வேறுபடுத்திக் காட்டுக.
    - v. ஊடகங்கள் பின்பற்றவேண்டிய பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.
    - vi. இரண்டாம் கலீபா உமர் (ரழி) அவர்களின் இரண்டு சேவைகளைக் குறிப்பிடுக.
    - vii. இமாம் ஷாபிஈ அவர்களால் தொகுக்கப்பட்ட இரண்டு நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
    - viii. ஜாஹிலிய்யாக் காலத்தில் காணப்பட்ட இரண்டு சந்தைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
    - ix. ‘ஜம்உ தக்தீம்’ என்பதனால் விளங்குவது யாது?
    - x. அல்குர்ஆனின் முன்னால் தமது பலவீனத்தை ஒப்புக்கொண்ட இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (10x2=20 புள்ளிகள்)

02. i. ‘இபாதத்’ என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.
    - ii. அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளத்தின் 03 (மூன்று) நிலைகளையும் பொருளுடன் குறிப்பிடுக.
    - iii. தௌபா ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளைப் பட்டியற்படுத்துக.

(10 புள்ளிகள்)

03. i. மனித உரிமைகள் தொடர்பான அல்குர்ஆன் அல்லது ஹதீஸ் ஆதாரம் ஒன்றைக் குறிப்பிடுக.
    - ii. ஒரு மு∴மினிடம் இருக்கவேண்டிய பண்புகளில் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
    - iii. அல்குர்ஆனுக்கு அடுத்த தரங்களில் மதிக்கப்படுகின்ற பரிசுத்த ஹதீஸ் கிரந்தங்களான ‘அஸ்ஸிஹாஹுஸ் ஸித்தா’ வில் அடங்கும் நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

04. i. ஷிர்க்கின் வகைகளைக் குறிப்பிடுக.
    - ii. அஜ்னபிகளுடன் பழகும்போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
    - iii. ஹஜ்ஜுடன் தொடர்புடைய பின்வரும் பதங்களை விளக்குக.
        - a. தவாப்
        - b. ஜம்ரா

(10 புள்ளிகள்)

05. i. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின்போது தடை செய்யப்பட்ட விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ii. பெரும்பாவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

iii. ‘இத்தா’ என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

06. i. ஆன்மீக மேம்பாட்டிற்கான வழிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

ii. பின்வரும் நபிமார்களான மூஸா (அலை), ஈஸா (அலை), ஸாலிஹ் (அலை) அவர்களால் நிகழ்த்திக்காட்டிய அற்புதங்கள் ஒவ்வொன்று வீதம் தருக.

iii. இளமைப் பருவத்தினை அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்கு இஸ்லாம் குறிப்பிடும் வழிகாட்டல்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் ஏதாவது இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. நபி (ஸல்) அவர்களின் மக்கா கால இஸ்லாமிய அழைப்புப் பணி.

ii. இஸ்லாமியக் குடும்பம்.

iii. அல் மஸ்ஜிதுல் அக்ஸா.

iv. இஸ்லாத்தின் பார்வையில் உம்மத்

(10 புள்ளிகள்)


LOL.lk
Learn Ordinary Level
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර
G.C.E. O/L
විද්‍යාව
A9+
ඉංග්‍රීසි භාෂාව
ENGLISH LANGUAGE
සිංහල
G.C.E. O/L SINHALA
General English
• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams
සමනල දැනුම
විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank
Master Guide
WWW.LOL.LK
CASH ON DELIVERY
HOME DELIVERY
Whatsapp contact
+94 71 777 4440
Website
www.lol.lk
Order via WhatsApp
071 777 4440